தரம் : 12

எவையேனும் 04 வினாக்களுக்கு விடை தருக.

வினா (01)


(a) ஒரு பாட்டைத் தெரிந்தெடுத்து இசைப்பதற்கு ஒரு விளையாட்டு இசைக் கருவியில் P,Q என்னும் இரு பொத்தான்கள் உள்ளன. அவற்றில் யாதாயினும் ஒரு பொத்தானை அழுத்தும்போது உரிய பாட்டு இசைக்கப்படும். இரு பொத்தான்களையும் ஒரே தடவை அழுத்தும்போது பாட்டு இசைக்கப்படமாட்டாது. பின்வரும் நிலைகளைக் கருதுக.

- ஒரு பொத்தான் (P,Q) அழுத்தப்படும்போது அல்லது அழுத்தப்படாதபோது
  - ஒரு பொத்தான் அழுத்தப்படும்போது – நிலை '1'
  - ஒரு பொத்தான் அழுத்தப்படாதபோது – நிலை'0'
- ஒரு பாட்டு இசைக்கப்படும்போது அல்லது இசைக்கப்படாதபோது (Y)
  - ஒரு பாட்டு அழுத்தப்படும்போது – நிலை '1'
  - ஒரு பாட்டு அழுத்தப்படாதபோது – நிலை'0'

பின்வரும் மெய்நிலை அட்டவணையை உமது விடைத்தாளில் நகல்செய்து வெற்றுநிரல் Yயைப் பூரணப்படுத்துக.

P	Q	Y
0	0	
0	1	
1	0	
1	1	

(b) பின்வரும் வரிப்படத்தில் தருக்கச் சுற்றுக்கு மெய்நிலை அட்டவணையை வரைக.



(c) மேசைக் (desktop) கணினியுடன் ஒப்பிடும்போது மடிக் (laptop) கணினியின் இரண்டு அனுகூலங்களைக் குறிப்பிடுக.

(d) பயன்பாட்டுச் செய் நிரல்கள் (Utility programs) கணினி வளங்களை முகாமித்து, பராமரித்து கட்டுப்படுத்துவதற்கு உதவுகின்றன. பின்வருவனவற்றில் எவை பயன்பாட்டுச் செய்நிரல்களாக கருதப்படலாம்.

(I) தேடற் பொறிகள் (Search engines)
(II) விரிதாள் மென்பொருள்(Spreadsheet software)
(III) வட்டு ஒருங்கமைப்பிகள் (Disk defragmenters)
(IV) வட்டு வருடிகள் (Disk Scanners)
(V) காப்பு மென்பொருள் (Backup software)

(e) 'Lyche' என்னும் உற்பத்திக் கம்பனி அதன் கணக்கீட்டு செயற்பாடுகளையும் இருப்புக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளையும் தன்னியக்கமாக்குவதற்கு இரு மென்பொருள் பிரயோகங்களை விருத்திசெய்து தருமாறு ஒரு மென்பொருள் விருத்தி செய்யும் நிறுவகத்திடம் வேண்டுகோள்

www.lkedu.lk

விடுத்துள்ளது. 'Lyche' கம்பனி சம்பளங்களை முறைவழியாக்குதவற்கு ஒரு சம்பளப் பட்டியற் பிரயோகத்தையும் சொல் முறைவழிப்படுத்தல், விரிதாள் செயற்பாடுகளுக்காக ஓர் அலுவலகத் தன்னியக்க மென்பொருளையும் ஒரு மென்பொருள் விற்பனையாளரிடமிருந்து கொள்வனவு செய்கின்றது.

(i) 'Lyche' கம்பனி மென்பொருள் விருத்தி செய்யும் நிறுவகத்திடமிருந்து விருத்திசெய்து தருமாறு வேண்டுகோள் விடுத்த மென்பொருளின் வகையை விபரிக்கப்பயன்படுத்தும் பதம் பின்வருவனவற்றில் யாது? (தேவை மீது தயார்செய்த (tailor made) மென்பொருள், பொதிசெய்த மென்பொருள்)


(ii) 'Lyche' கம்பனி மென்பொருள் விற்பனையாளரிடமிருந்து கொள்வனவு செய்த மென்பொருளின் வகையை விபரிக்கப் பயன்படுத்தும் பதம் பின்வருவனவற்றில் யாது?
(தேவை மீது தயார்செய்த (tailor made) மென்பொருள், பொதிசெய்த மென்பொருள்)
(iii) தேவை மீது தயார்செய்த மென்பொருளிலும் பார்க்க பொதிசெய்த மென்பொருளின் ஓர் அனுகூலத்தைத் தருக.

வினா (02)

உங்கள் நண்பரொருவர் தனது வீட்டுப் பாவனைக்கென மடிக் கணனியை (Laptop) கொள்வனவு செய்தார். அவர் நான்கு குதை (Port) களையுடைய கம்பியில்லாத் தந்தி வழிச்செயலி (wireless router) மூலம் இணைய சேவை வழங்கி (ISP) இலிருந்து இணையத் தொடர்பைப் பெற விளைகிறார்.

(i) அவர் தனது மடிக்கணனியை வழிச் செயலியுடன் தொடுக்கக்கூடிய இரண்டு ஊடக வகைகளைப் (media types) பெயரிடுக.
(ii) அவரது குடும்பத்தவர் இன்னொரு மடிக் கணனியைக் கொள்வனவு செய்தால் அதனையும் இதே வழிச் செயலியைப் பாவித்து இணையத்துடன் தொடுக்க முடியுமா? உங்கள் விடையை நியாயப்படுத்துக.
(iii) இந் நிகழ்வுகளில் இடத்துவரி வலையமைப்பு (LAN), பெரும்பரப்பு வலையமைப்பு (WAN) என்பவற்றைக் கண்டறிந்து எழுதுக.

(ஆ) யாதவன் பயன்படுத்தும் மின்னஞ்சல் (email) மென்பொருளின் இடைமுகத்தைக்(Interface) கீழேயுள்ள உரு காட்டுகின்றது.



1. யாதவன் தனது மேலதிகாரியின் e-mail முகவரியை தட்டச்சு செய்ய வேண்டிய இடம் எது ?

2. மின்னஞ்சலின் தலைப்பை பதிவு செய்ய வேண்டிய இடம் எது ?

3. CC பகுதியில் உள்ள மின்னஞ்சலை பெறுபவர் BCC பகுதியில் உள்ள பெறுநர்களை அறிய முடியுமா ?

4. மேலதிகாரியினால் அனுப்பப்பட்ட மின்னஞ்சல் எந்த கோப்பினுள் காணப்படும் ?

5. BCC யின் நோக்கம் யாது ?

6. SPAM மின்னஞ்சல் என்றால் என்ன ?

7. மின்னஞ்சலினூடு கோப்பு ஒன்றையும் இணைத்து அனுப்பவேண்டியுள்ளது. மேலுள்ள படத்தில் இதற்கு பொருத்தமான ஆங்கில எழுத்து.

8. B என இலக்கமிட்ட இணைப்பின் பயன்பாடு யாது ?

www.ikeduLK


வினா (03)

(a) முன்வைப்பு மென்பொருள் தொடர்பான வெற்றிடங்கள் உள்ள பின்வரும் வாக்கியங்களைக் கருதுக

(i) சாவிப் பலகையின் செயற் சாவி FI அழுத்துவதன் மூலம் ..... தொடக்கலாம்.
(ii) ஒரு பட வில்லையின் திசையளியை (orientation) ..... சாரளத்தினூடாக மாற்றலாம்.
(iii) ஒரு படவில்லையிலிருந்து அடுத்த பட வில்லைக்கு நகரும்போது படவில்லைக் காட்சியில் ஏற்படும் அசைவூட்டம் போன்ற விளைவுகள் ..... ஆகும்.
(iv) வில்லைகளைச் சுருக்கமான வடிவத்தில் நோக்குதல் ..... நோக்குதல் எனப்படும்.

மேற்குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு உகந்த பதங்களைக் கீழே தரப்பட்டுள்ள பட்டடியலிருந்து இனங்காண்க.
பட்டியல் : படவில்லைக் காட்சி/ அசைவூட்டங்கள் / உதவிச் சாரளம் / வடிவமைப்புப் படிமவச்சுகள் / பக்க அமைவு படவில்லை /மாறுகைகள் படவில்லை/ வரிசையாக்கி / புதிய படவில்லை
குறிப்பு வினா எண்ணுக்கு எதிரே உரிய பதத்தை எழுதுக.

(b) உரு I இல் ஒரு சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளைப் பயன்படு.த்தி பகுதியாக வடிவமைக்கப்பட்ட ஒரு பாட ஆவணம் காட்டப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தில் மேலும் வடிவமைக்கப்பட வேண்டிய மூலகங்கள் A-F என முகப்படையாளமிடப்பட்டுள்ளன.


A — How polluted is YOUR country?

B — A staggering 90 per cent globally are breathing poor quality air.
Pollution is blamed for more than six million deaths a year, new stats show.
The problem is worst in cities, but rural air is worse than many think.
Data 'is enough to make all of us extremely concerned,' experts have said.

C — Nine out of ten people globally are breathing poor quality air, the World Health Organization (WHO) said yesterday.
In a staggering report, calling for dramatic action against pollution that is blamed for killing more than 16,000 Brits and six million people worldwide, every year.
New data in a report from the UN's global health body 'is enough to make all of us extremely concerned,' Maria Neira, the head of the WHO's department of public health and environment, told reporters.


E

D — WHO released an interactive map showing the exposure to pollutants known as PM2.5 for all countries.
It also shows values for pollutants in various cities and towns.
The problem is most acute in cities, the report found, but air in rural areas is worse than many think, WHO experts said.
Poorer countries have much dirtier air than the developed world, according to the report, but pollution 'affects practically all countries in the world and all parts of society', Mrs Neira said in a statement.

F — Read more:
http://www.dailymail.co.uk/sciencetech/article-3809171/Over-90-world-breathing-bad-air-WHO.html#ixzz4LeaZK38e

உரு II இல் ஒரு வகையான சொல் முறைப்படுத்தல் மென்பொருளில் கிடைக்கத்தக்க வடிவமைக்கும் கருவிகள் காணப்படுகின்றன. முகப்படையாளங்கள் 1 – 17 ஐப் பயன்படுத்துவதன்மூலம் பின்வரும் பணிகளை (Task) நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் கருவிகளை எழுதுக.

(**குறிப்பு** : தேவையான எண்ணிக்கைக்கு மேலதிகமாக முகப்படையாளங்களை எழுதினால் புள்ளிகள் **வழங்கப்படமாட்டாது.**



(i) A எனக் காட்டப்பட்டுள்ள ஆவணத்தின் தலைப்பின் தோற்றத்தை தடிப்பு முகமாக மாற்றுக.

(ii) ஆவணத்தின் தலைப்பை மையப்படுத்துக

(iii) தலைப்பின் எழுத்துரு (font) அளவை 20 ஆகக் கூட்டுக.

(iv) B என முகப்படையாளமிடப்பட்டுள்ள வாக்கியங்களின் தோற்றத்தை ஒரு குண்டுக்குறியிட்ட பட்டியலாக மாற்றுக.

(v) C,D என முகப்படையாளமிடப்பட்டுள்ள பந்திகளை இடப்பக்கமாகச் சீர்படுத்துக. (left justify)

(vi) E,F என முகப்படையாளமிடப்பட்டுள்ள பாடத்தை (வநஓவ) மீயிணைப்புகளாக (hyperlinks) மாற்றுக.

(vii) ஆவணத்தின் எழுத்துக்களைச் சரிபார்க்க (spelling)


(c) ஒரு பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் ஒரு தனிப் பயனருக்கு மாத்திரம் அனுமதியளிக்கப்பட்டுள்ள அதன் அலுவலகப் பணிக்கான அலுவலகத் தன்னியமாக்கல் மென்பொருளைக் கொள்வனவு செய்கின்றது. அது சங்கத்தின் நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டமையால் சங்கத்தின் செயலாளர் இம்மென்பொருளின் ஒரு நகலை ஒவ்வோர் உறுப்பினருக்கும் வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளார்.

(i) செயலாளரின் தீர்மானம் ஏன் ஏற்றுக்கொள்ளத்தக்கதன்று என்பதை விளக்குக.

(ii) அலுவலகத் தன்னியக்கமாக்கல் மென்பொருளின் பல நகல்களைக் குறைந்த விலையில் அல்லது இலவசமாகக் பெறுவதற்கான ஓர் இயல்தகு தீர்வைத் தருக.

வினா (04)

4) (a) சில வளிமண்டலவியல் நிலையங்களில் 24 மணித்தியால காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட வெப்பநிலை, மழைவீழ்ச்சி என்பன தொடர்பான ஒரு தரவுக் கூட்டம் பின்வரும் விரிதாளில் காட்டப்பட்டுள்ளது.


B31 h

	A	B	C	D
1	MERELOGICAL STATION	MAXIMUM TEMPERATURE(°C)	MINIMUM TEMPERATURE(°C)	DAILY RAINFALL(mm)
2	AMBALANGODA	31	24	52
3	ANURADHAPURA	46	28	48
4	BADULLA	37	17	62
5	BATTICALOA	36	22	43
6	COLOMBO	30	23	40
22	KURUNAGALA	24	20	51
23	NEGOMBO	27	23	40
24	MINIMUM			
25	MAXIMUM			
26	AVERAGE			
27				

www.ktdu.lk

(i) 20 நிலையங்களிலிருந்தும் உயர்ந்த பட்ச வெப்பநிலையின் குறைந்த பெறுமானத்தைக் காட்சிப்படுத்துவதற்குக் கலம் B24இல் நுழைக்கப்படவேண்டிய சூத்திரத்தை வடிவம் = function 1(cell1:cell2)இல் எழுதுக.

(ii) 20 நிலையங்களிலிருந்தும் உயர்ந்த பட்ச வெப்பநிலையின் கூடிய பெறுமானத்தைக் காட்சிப்படுத்துவதற்குக் கலம் B25இல் நுழைக்கப்படவேண்டிய சூத்திரத்தை வடிவம் = function 2(cell3:cell6)இல் எழுதுக.

(iii) 20 நிலையங்களினதும் சராசரி உயர்ந்தபட்ச வெப்பநிலையைக் காட்சிப்படுத்துவதற்கு கலம் B26 இல் நுழைக்கப்பட வேண்டிய சூத்திரத்தை வடிவம் = function 3(cell5:cell4)இல் எழுதுக.

(iv) கலம் B24 இல் நுழைக்கப்பட்ட சூத்திரம் கலம் D24இல் நகல் செய்யப்படுமெனில், கலம் D24இல் தேக்கிவைக்கப்படும் சூத்திரம் யாது?

(v) கலம் B25 இல் உள்ள சூத்திரம் கலம் D25இற்கு நகல் செய்யப்படுமெனில், கலம் D25இற் காட்சிப்படுத்தப்படும் தகவல் யாது?

(vi) 20 நிலையங்களினதும் உயர்ந்தபட்ச வெப்பநிலையையும், குறைந்தபட்ச வெப்பநிலையையும் காட்டுவதற்குப் பயன்படுத்தத்தக்க கோட்டுப்படங்களின் இரு வகைகளைத் தருக.

(b) குறித்த புத்தக விற்பனை நிலையம் புத்தகங்களையும், புத்தகங்கள் வழங்குபவர்களின் விபரங்கள் பற்றிய பதிவுகளை பேணிவருகின்றது. இந்த நிலையத்தின் முகாமையாளர் தரவுத்தளமொன்றை பின்வருமாறு உருவாக்கியுள்ளார்.

ISBN	TITLE	AUTHER	EDITION	PUBLISHER	PRICE	SUPID
7900894803	TWLIGHT SAGA	STEFANIE MAYER	3rd	MHE	2000	SB001
7945229822	A CHRISTMAS CAROL	CHARLES DICKENS	2nd	MCHill	2600	SB002
7910542236	SHERLOCK HOLMES	CONAN DOYLE	1st	Aurora	2500	SB001
7975493357	OLIVER TWIST	CHARLES DICKENS	7th	MCHill	1500	SB005
7962866649	HARRY POTTER VOL. 2	J.K. ROWLING	1st	J.K. pub	2000	SB003

(i) ISBN, புத்தகத்தின் பெயர் (title), பதிப்பு (Edition), விலை (Price) ஆகியவற்றிற்கு பொருத்தமான புல வகைளை தருக.

(ii) முதன்மை சாவிக்கு பொருத்தமான ஒரு புலத்தை தருக

(iii) பின்வரும் பணிகளுக்கு பயன்படுத்தப்பட வேண்டிய தரவுத்தள கூறை (Object) தருக

a. புத்தக அட்டவணையில் தரவை நுழைத்தல் அல்லது தரவை பதிப்பித்தல்
b. வெளியீட்டாளர்களின் புத்தகங்களின் மொத்த விற்பனைகள் பற்றிய வடிவமைக்கப்பட்ட வெளியீட்டை (output) காட்டுதல்.
c. நூலாசிரியர் என்ற ரீதியில் "CONAN DOYLE" இற்கு கிடைக்கத்தக்க தலைப்பை காட்டுதல்

வினா (05)

(a) (i) ஒரு கணனிச் செய்நிரலை (Program) வடிவமைக்கும்போது பாய்ச்சற் கோட்டுப் படங்களை பயன்படுத்துவதன் இரு அனுகூலங்களைப் பட்டியற்படுத்துக


(ii). இரு எண்களை வாசித்து, கூட்டுத்தொகையைக் கணித்து, பேறை அச்சிடுவதற்கு ஒரு கோட்டுப் படத்தை வரைக

குறிப்பு :

திசைப் பாய்ச்சல், தொடக்குதல்/நிற்பாட்டுதல், உள்ளீடு/வருவிளைவு, முறைவழி ஆகியவற்றுக்குச் சரியான குறியீடுகளை நீர் பயன்படுத்த வேண்டும்.

www.ikcd.lk

(b) உடநல விஞ்ஞான ஆசிரியர் ஒருவருக்கு தனது வகுப்பில் உள்ள நிறை குறைந்த மாணவர்களை இனங்காண்பதற்கு ஒரு கணினிச் செய்நிரல் தேவைப்படுகின்றது. வகுப்பில் 40 மாணவர்கள் உள்ளனர். நிறை குறைந்த மாணவர்கள் அவர்களுடைய உடல் திணிவுச் சுட்டியினால் (Body mass Index – BMI) இனங்காணப்படுகின்றனர். கிலோகிராமிலான நிறையை மீற்றரிலான உயரத்தின் வர்க்கத்தினால் வகுப்பதன்மூலம் BMI கணிக்கப்படுகின்றது. தேவையான செய்நிரலிற்குப் பின்வரும் பாய்ச்சற் கோட்டுப்படம் வரையப்படுகின்றது. தொடர்புகொள்வதற்குக் குறியீடுகள் A தொடக்கம் J வரைக்கும் குறிக்கப்பட்டுள்ளன.



மேற்குறித்த பாய்ச்சற் கோட்டுப்படத்தை பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(i) பாய்ச்சற் கோட்டுபடத்தின் உள்ளீட்டை (உள்ளீடுகளை) எழுதுக.

(ii) பாய்ச்சற் கோட்டுப் படத்தின் ஓர் இயல்தகு வருவிளைவை எழுதுக.

(iii) திரும்பச் செய்தலின் (iteration) நிலைமையை (condition) எழுதுக.

(iv) திரும்பச் செய்தலை முடிவுறுத்த உதவும் கூற்றை எழுதுக.

(v) தெரிவுக் கட்டுப்பாட்டுக் கட்டமைபினுள்ளே (selection control structure) நிறைவேற்றப்படும் முகப்பு அடையாளத்தை (அடையாளங்களை) (table) பட்டடியற்படுத்துக.

(vi) தடம் (loop) முடிவுறுத்தப்படும்போது count இற்குக் குறித்தொதுக்கப்படும் பெறுமானம் யாது?

(vii) வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களும் நிறை குறைந்தவர்களாக இராவிட்டால், தரப்பட்டுள்ள பாய்ச்சற் கோட்டுப்படத்தில் நிறைவேற்றப்படாத படிமுறையின் முகப்பு அடையாளத்தைப் பெயரிடுக.

www.lkedu.lk

வினா (06)

(a) கணினியுடன் தொடர்புபட்ட சில விபரக்கூற்றுக்களைக் கொண்ட A தொடக்கம் G வரைக்கும் முகப்படையாளமிடப்பட்டுள்ளன. பின்வரும் பட்டியலைக் கருதுக.

A 1.9GHz, 8GBDDR4, 14inch (அங்குலம்) 500GB SATA, 24ports (துறைகள்) 1.9kg 24pages per minute (நிமிடத்திற்கு 24 பக்கங்கள்)

பின்வரும் பட்டியலில் தரப்பட்டுள்ள பதங்கள் ஒவ்வொன்றுக்கும் உகந்த விபரக்கூற்று முகப்படையாளத்தை மேற்படி முகப்படையாளங்களிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

பட்டியல் : காட்சி, வலையமைப்பு, ஆளி, அச்சுப்பொறி, முறைவழியாக்கியின் கதி, சுயஅ, தேக்ககம், RAM, நிறை

குறிப்பு: உரிய விபரக்கூற்றுக்கான பதத்தையும் முகப்படையாளத்தையும் உங்கள் விடைத்தாளில் எழுதுக)

(b) ஒரு தகவல் முறையின் விருத்தியையும் நடைமுறைப்படுத்தலையும் விபரிக்கும் பின்வரும் பந்தியைக் கருதுக. கார்த்திகா நடப்பு முறைமை பற்றிக் கற்பதன் மூலமும் பயனர்களுடன் கலந்துரையாடுவதன் மூலமும் ஒரு புதிய மாணவர் தகவல் முறைமையின் தேவைகளை இனங் காண்கிறார். அவரது மாணவர் தரவை, ராஜ் இம் முறைமையில் எளிதாக சேர்க்கத்தக்கதாக தேவைகளைத் திருப்தியாக்கும் ஒரு முறைமையை வடிவமைக்கின்றார். கார்த்திகா உருவாக்கிய வடிவமைப்பை அடிப்படையாகக்கொண்டு கிருத்தி மாணவர் தகவல் முறைமையை உருவாக்குகின்றார். புதிய முறைமையை இயக்கத்தக்கதாக கிருஷா ஒரு பதிய சேவையகத்தை (Sever) நிறுவிச் (installed) சோதிக்கிறார். அடுத்த வாரத்திலிருந்து புதிய மாணவர் தகவல் முறைமையைப் பயன்படுத்தத்தக்கதாக இருக்கும் என்பதைப் பயனர்களுக்கு அறிவிப்பதற்குக் கிருஸ்ணா பல்கலைக்கழக வலைத்தளத்தை இற்றைப்படுத்துகிறார்.

தகவல் தொழினுட்பவியல் துறையில் உள்ள சில தொழில் வாய்ப்புகள் பின்வரும் பட்டியலில் H தொடக்கம் L வரையான முகப்படையாளங்களினால் காட்டப்பட்டுள்ளன.

H – செய்நிரல், I- முறைமைப் பகுப்பாய்வாளர், J – முறைமைப் பொறியிலாளர், K – தரவு உள்ளீட்டாளர், L – வலைப் பொறுப்பாளர் (webmaster)

தரப்பட்டுள்ள விபரங்களை அடிப்படையாகக்கொண்டு கார்த்திகா, ராஜ், கிருத்தி, கிருஷா, கிருஸ்ணா ஆகியோருக்குப் பொருத்தமான தொழில் வாய்ப்புக்களை பட்டியலிலிருந்து இனங்காண்க. ஒவ்வொரு நபரின் பெயரையும் உரிய தொழில் வாய்ப்பின் முகப்படையாளத்தையும் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

(c) பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள விபரணங்களை கருதுக.

விபரண இல.	விபரணம்
1	நீண்ட நேரத்திற்கு ஒரு கதிரையில் அமர்ந்து வளைந்திருந்து கணினியைப் பயன்படுத்துதல்
2	ஒரு மென்பொருள் பயன்தரத்தக்கதாக தோற்றுகின்ற போதிலும் கணினியில் நிறுவப்பட்டதும் தீங்குபயத்தல்
3	நீண்ட நேரத்திற்கு திரையைப் பார்த்துக்கொண்டு கணினியில் பணிகளைச் செய்யும்போது ஏற்படும் பிரச்சினைகள்
4	அனுமதியைப் பெறாமல் அல்லது கொடுப்பனவைச் செய்யாமல் ஒரு நகலுரிமை பெற்ற மென்பொருளைப் பதிவிறக்கம் செய்தல் (Downloading)

www.ikeuk

(i) A – D வரை முகப்படையாளமிட்பட்ட பின்வரும் பதங்களை மேற்குறித்த அட்டவணையில் தரப்பட்டுள்ள விபரணங்களுடன் தொடர்புபட்டவை.

A- களவு, B – கண் உறுத்தல், C – றோஜன் குதிரை, D – முதுகுவலி

மேற்குறித்த அட்டவணையில் தரப்பட்டுள்ள விவரணங்கள் ஒவ்வொன்றுக்கும் உகந்த பதத்தை மேற்குறித்த பட்டியலிலிருந்து இனங்கண்டு எழுதுக.

குறிப்பு: விடைத்தாளில் விபரணத்தின் இலக்கத்திற்கு எதிரே உகந்த பதத்தின் உரிய முகப்படையாளத்தை எழுதுக.

(ii) E – H வரை முகப்படையாளமிடப்பட்ட பின்வரும் பதங்கள் மேற்குறித்த அட்டவணையில் விபரிக்கப்பட்ட பிரச்சினைகளுக்குரிய சாத்தியமான தீர்வுகளை வகைக்குறிக்கின்றன.

E – சரியான கொண்ணிலையில் அமருதல், F – நகலுரிமைச் சட்டங்கள் தொடர்பாகப் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல், G – கணினியைப் பயன்படுத்தும்போது கண்ணை இடையிடையே ஒரு தூரப் பொருளில் குவியப்படுத்தல், H – நச்சுநிரலெதிர்ப்பு மென்பொருளை நிறுவுதல்

மேற்குறித்த அட்டவணையில் விபரிக்கப்பட்ட பிரச்சினைகள் ஒவ்வொன்றுக்கும் ஓர் உகந்த தீர்வை மேற்குறித்த பட்டியலிலிருந்து இனங்கண்டு எழுதுக.

குறிப்பு: உமது விடைத்தாளில் விவரணத்தின் இலக்கத்திற்கு எதிரே உகந்த தீர்வின் உரிய முகப்படையாளத்தை எழுதுக.

www.lkedu.lk